பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 2 (18—10—68) வெள்ளி ★ வெளியூர் : ஐப்பசி 3 (19—10—68) சனி [இதழ் : 102

கொள்ளை அடித்தவர்கள் யோக்கியர்கள்போல் பேசுகின்றனர்!

காங்கிரசுக்காரர்களின் பழைய 'கதை' யாருக்குத் தெரியாது?---
அம்பலப்படுத்துகிறார் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

சென்னை, அக். 18—

"தேர்தலுக்குத் தேர்தல் காங்கிரசுக்காரர்கள், ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லிப் பார்க்கிறார்கள்; இருந்தாலும் படுதோல்வி அடைந்துவிடுகிறார்கள்!

"தென் சென்னைத் தேர்தலின்போது, 'படி அரிசித் திட்டம் இனி படுத்துவிடும்' என்றார்கள் -- நடக்கவில்லை!

"சங்ககிரித் தேர்தலில், 'பட்டிக்காட்டுக்காரனைப் பட்டினிப் போட்டுவிடுவார்கள்' என்றார்கள்! நல்ல மழை பெய்தது -- விளைச்சல் அதிகமாயிற்று -- எவரும், பட்டினி கிடக்க நேரிடவில்லை!

"தென்காசித் தேர்தலில், 'சட்டம் -- ஒழுங்கு போய்விட்டது' என்ற பொய்யைச் சொன்னார்கள் -- மக்கள் அதை மதிக்கவில்லை -- கழகத்தை வெற்றிபெறச் செய்தார்கள்!

"இப்போது மாநகராட்சித் தேர்தலில், 'கழகத்துக்காரர்கள் எல்லாம் பிரபுக்கள் ஆகிவிட்டனர்' என்று ஒரு பொய்யைக் கூறுகிறார்கள்! இந்தப் பொய்யைக்கூட மக்கள் நிராகரிப்பார்கள் என்பது உறுதி! உள்ளபடியே அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திப் பிரபுக்கள் ஆனதே காங்கிரசுக்காரர்கள் தானே!

"கோழிப் பண்ணை வைப்பதாகச் சொல்லி ஆயிரக்கணக்கான ரூபாய்களை எடுத்துக்கொண்டவர்களின் பட்டியல் என்னிடம் இருக்கிறது; இன்று காமராசரை எதிர்க்கும் காங்கிரசுப் பிரமுகர் ஒருவர், கோழிப் பண்ணை அமைப்பதாக இரண்டாயிரம் ரூபாய் வாங்கியிருந்தார்; அந்தக் கணக்கை நான் பார்த்து அந்தப் பணத்தை வசூல் செய்யச் சொன்னேன்; அவர், என்னிடம் வந்து, '120 கோழிகளைத் தந்துவிடுகிறேன்' கணக்கை நேர் செய்துவிடுங்கள்' என்றார்: 'இதென்ன கணக்கு -- ஒழுங்காகப் பணத்தைக் கட்டிவிடுங்கள்' என்று சொல்லி அனுப்பினேன்; இவ்விதம் எத்தனையோ பேர் கோழிப் பண்ணையைப் பயன்படுத்திப் பிரபுக்கள் ஆனவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள்!

"1965-ஆம் ஆண்டில் திருப்பெரும்புதூர் தொகுதியில் இரண்டு பேருக்குப் பத்தாயிரம் —பத்தாயிரம் என்று ரூ. 20-ஆயிரம் தந்தார்கள்; எதற்கு -- பசு மாடு வாங்க! ஆனால் பசு மாடும் வாங்கவில்லை -- காளை மாடும் வாங்கவில்லை!

"இப்படி அரசாங்கத்தின் பணத்தைக் கொண்டு பிரபுக்கள் ஆனவர்கள், இன்று யோக்கியர்கள்போல் பேசுகிறார்கள்!

"இந்தப் பசு மாடுபற்றிய கேள்வி ஒன்றைத் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் இராசரத்தினம், சட்டமன்றத்தில் கேட்டார்; நான் புள்ளிவிவரங்களைத் தந்து, 'ஒருவர்கூடப் பசு மாடு வாங்கவில்லை' என்று கூறினேன்; காங்கிரசு உறுப்பினர் விநாயகம் எழுந்து, 'அவர்களுக்கு நல்ல மாடு கிடைக்காமல் இருக்கலாம்; இன்னும் கொஞ்ச காலம் கெடு கொடுக்கலாம்' என்றார்; 'அது நடக்காது; உடனே பணத்தைக் கட்டுமாறு கூறியிருக்கிறேன்' என்றேன்!

"இப்படி, கோழிப் பண்ணையின் பெயராலும், பசு மாட்டின் பெயராலும், மாட்டுத் தீவனத்தின் பெயராலும் கொள்ளையடித்த பிரபுக்களின் கூற்றுக்களையெல்லாம் மக்கள், நிச்சயம் நிராகரிப்பார்கள்!"

(வடசென்னை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

அண்ணாவை க. அன்பழகன் சந்தித்தார்

"அறிஞர் அண்ணா அவர்களின் உடல் நிலை தொடர்ந்து தேறிவருகிறது. வழக்கமான உணவு உட்கொள்கிறார் --- நடக்கிறார் --- உற்சாகமாகவே இருக்கிறார்.

அமெரிக்கா வந்துள்ள பேராசிரியர் அன்பழகன் அவர்கள் அண்ணா அவர்களைப் பார்த்தார்; கோவைக் கழகத் தோழர் பட்டாபி, டாக்டர் மில்லருக்கு அனுப்பிவைத்த தங்கப் பதக்கத்தை, பேராசிரியர் கொண்டுவந்து கொடுத்தார்.

அமெரிக்கா வந்துள்ள தொழிலதிபர் திரு. சீனிவாசன், டாக்டர் மில்லர் குடும்பத்துக்கும், மிலலரின் உதவியாளர்கட்கும் காஞ்சீபுரம் பட்டுப் புடவைகள் பரிசளித்தார்.

போக்குவரத்தை கட்டுப்படுத்த இயந்திரம்!

பிரிட்டனில் சாலைப் போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்த இப்போது 'கம்ப்யூட்டர்'களை (தானே இயங்கும் விசை) பயன்படுதத முன் வந்துள்ளனர்.

போக்குவரத்திற்கான 'சிக்னல்' விளக்குகளை, 'கம்ப்யூட்டர்'கள் கட்டுப்படுத்துவதால், துரிதமாகவும், நுணுக்கமாகவும், பிசகாமலும் இவை இயங்குவதுடன், அது போன்ற இடங்களில் காத்திருக்கும் நேரத்தில் 20 சதவிகிதம் குறைகிறது.

மாநகராட்சியில் தி. மு. க. செய்த புரட்சி!

மக்களைக் குழப்ப சுப்ரமணியத்தின் குதர்க்க வாதம்

அமைச்சர் மு. கருணாநிதி தரும் பதில்

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள், 'தி. மு. கழக மாநகராட்சி நிர்வாகத்தில் வரி உண்டு; ஆனால் வசதி இல்லை' என்று கூறுகிறார்! ஏதோ இவர்கள், மாநகராட்சி நிர்வாகத்தில் இருந்தபோது 'வரியே இல்லை -- வசதிமட்டும் உண்டு' என்று இருந்ததுபோல் பேசுகிறார்கள்!

"தி. மு. கழகம் மாநகராட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் ஒரு பெரிய புரட்சியைச் செய்தது! 1958-ம் ஆண்டுவரையில் --- மாநகராட்சிப் பொறுப்பைக் காங்கிரசு ஏற்றிருந்த காலத்தில் -- மேயர்களாக வந்தவர்கள் இராஜா சர் குடும்பத்தைச் சார்ந்தவர்களும், சீமான்களும், பூமான்களும், கோமான்களும்தான்! அத்தகைய பணக்காரர்கள் அமருவதற்கேற்ற வகையில் இருபதாயிரம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்ட நாற்காலியையும், 40 ஆயிரம் செலவில் செய்யப்பட்ட தங்கச் சங்கிலியையும் வைத்திருந்தார்கள்! தி. மு. கழகம்தான் அந்த நிலையை மாற்றி, ஏழை எளியவர்களையும் மேயர்களாக ஆக்கியது! 'அந்தத் தங்கச் சங்கிலி ஏழையின் கழுத்தையும் அலங்கரிக்கும்-- அந்த நாற்காலி ஏழையையும் தாங்கிக்கொள்ளும்' என்று புரட்சி செய்தது!

"இந்தப் புரட்சியைச் செய்தவர்கள், சனநாயக சோஷலிசம் பேசும் காங்கிரசுக்காரர்கள் அல்லர் -- தி. மு. கழகத்தினர்தான்!"

இவ்வாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள், மாநகராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில், வாக்காளப் பெருமக்களுக்கு உண்மை நிலையையும் காங்கிரசுக்காரர்களின் இலட்சணத்தையும் விளக்கினார்.

மேலும் அவர், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரின் சில பொருந்தாக் கூற்றுக்களுக்குப் பதில் தரும் வகையில், புள்ளிவிவரங்கள் பல தந்து கழக நிர்வாகத்தின் சிறப்புக்களை விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"'தி. மு. கழகம் மாநகராட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இந்த ஒன்பது ஆண்டுகளில் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் பெருகியிருக்கிறதே -- அந்த அளவுக்கு வசதிகள் பெருகவில்லையே ஏன்?' என்று கேட்டிருக்கிறார்!

மாநகராட்சியின் வருமானம் பெருகியது உண்மை; ஆனால், மக்கள் தொகையும் அந்த அளவுக்குமேல் பெருகியிருக்கிறது!

பத்து ஆண்டிறகுமுன் ஒரு கட்டிடம் கட்டுவதற்குப் பத்தாயிரம் ரூபாய்ச் செலவாகும் என்றால், இப்போது அதே கட்டிடம் கட்டுவதற்கு ஐம்பதினாயிரம் ரூபாய்ச் செலவாகும்!

பத்து ஆண்டிற்கு முன்பு ஒரு சாலை போட ரூ. 25 ஆயிரம் செலவாகும் என்றால், இப்

(4-ம் பக்கம் பார்க்க)

காதில் விழுந்தது!

"கடைசி வரையில், தந்திரத்திலேயே 'மாங்காய் மரம்' வரவழைக்கும் வித்தைக்காரனின் சாகசங்களைக் கவனித்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்; நீயும் சொல்லேன் -- கேட்கிறேன்!"

"'இதோ மரம் -- ஒரே ஒரு முறை கை தட்டுங்கள்' என்று சொல்லிவிட்டு, மூலையில் நிற்கும் சிறுவனைப் பார்த்து, 'ஏய், தம்பி -- யாரைப் பார்க்கிறே -- அப்பாவைத் தேடுறியா?' என்பான்; இப்படி, கூட்டத்தினர் அனைவரும் 'பயபக்தி' யுடன் கைதட்டிவிட்டு ஆவலுடன் 'மாங்காய் மர'த்துக்காகக் காத்து நிற்கும் ஒவ்வொரு முறையும் வித்தைக்காரன்—'பொக்கையில் போயிற்று பொரி மாவு' என்ற பாணியில் — ஏதாவது வேறு பேச்சுப் பேசி, நேரத்தைப் போக்குவான்!"

"எதற்காக நினைவுபடுத்துகிறாய்?"

"நினைவுபடுத்தவில்லை -- நானே நினைத்துக் கொண்டேன் -- இந்தக் காங்கிரசுக்காரர்கள் தேர்தல் பிரச்சாரத்தைக் கேட்ட பிறகு! சட்டமன்றத்துக்கு நடக்கும் தேர்தல் என்றால், 'ஐயோ, கார்ப்பரேஷன் நிர்வாகமா' என்று பேசுகிறார்கள்! கார்ப்பரேஷனுக்கே நடக்கும் தேர்தலிலோ, 'அப்பப்பா -- இந்தப் பதினெட்டு மாத கால ஆட்சியில்......' என்று அங்கலாய்க்கிறார்கள்!"

"இதில் புதிது ஒன்றுமில்லையே!"

"'விஷயம் தெரியாமல் இருக்க இடம் மாற்றி மாற்று' என்று கள்ள நோட்டுக்காரர் இருவர் சினிமா ஒன்றில் பேசிக் கொள்வது நினைவுக்கு வருகிறது. செலாவணிக்கு இலாயக்கற்ற தங்கள் பிரச்சார நாணயத்தைக் காங்கிரசுக்காரர்கள், இடம் மாற்றித்தான் மாற்றவேண்டியிருக்கிறது!"

★

"'ஆண் பிள்ளைதான் பிறக்க வேண்டும்' என விரும்பிய மன்னனிடம், 'அப்படியே பிறக்கும்' என்றும், 'பெண் மகவு பிறக்க வேண்டும்' என விருப்பப்பட்ட அரசியிடம், 'ஆசை நிறைவேறும்' எனவும் தனித்தனியே கூறி, வேண்டியதைப் பெற்ற சோதிடக்காரன் கதை தெரியுமா?"

"தெரியுமே -- கேள்விப்பட்டிருக்கிறேன் -- அந்த வேடிக்கைக்குரிய தந்திரத்தை!"

"அதையே இப்படிக் கற்பனை செய்து பார்! தனித்தனியே தங்களிடம் ஆசை வார்த்தைகளைக் கூறித் தப்பித்துக்கொண்ட சோதிடக்காரன்முன், மன்னனும் இராணியும் சேர்ந்து வந்து தோன்றினால் எப்படி இருக்கும்?"

"சோதிடத்துக்குச் சோதனைதான்! ஆமாம் -- இப்போது இதை எதற்குக் கூறுகிறாய்?"

"சங்ககிரியோடு இந்த நாட்டில் தேர்தல் முடிந்துவிடப் போகிறது என்ற நினைப்பில், பட்டணத்துக்காரர்களைப் பழித்து, கிரா

(4-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணு நலம் பெற மதுரையில் வாழ்த்துக் கூட்டம்

டாக்டர் மில்லருக்கு மாணவ — மாணவிகள் அன்பளிப்பு

மதுரை, அச். 17—

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கட்கு அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கவும், அண்ணு அவர்கள் விரைவில் முழு நலமடையவேண்டும் என்ற விழைவைத் தெரிவிக்கவும், மதுரையில் தனியார் பள்ளி நிர்வாகிகள் --- ஆசிரியர்கள் --- பெற்ருேர்கள் --- மாணவர்களின் கூட்டுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தமிழவேள் பி. டி. இராசன் தலைமை வகித்தார்.

மதுரை மடாதிபதி திரு. ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திரு. பி. ஆஸ்டின் திரவியம், மௌல்வி கே. எம். பஷீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அண்ணு அவர்கட்கு அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மில்லருக்கு அன்பளிப்பாக, மதுரை செயின்ட் ஜோசப் மகளிர் உயர்நிலைப் பள்ளி மாணவிகள்—மீனுட்சிக் கோயில் கோபுர உருவமும்; பாத்திமா கல்லூரி மாணவிகள்—மாதா கோயில் உருவமும்; தெற்கு வாசல் நாடார் வித்தியாசாலை மாணவர்கள்—தாஜ்மகால் உருவமும் வழங்கினுர்கள்.

இந்தப் பரிசுப் பொருள்கள் வெட்டியால் செய்யப்பட்டவையாகும்; தனித் தனியாகக் கண்ணுடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளன; ஒன்றின் விலை மதிப்பு ரூ. 1,500 ஆகும்.

அமெரிக்காவில் உள்ள ஐ. நா. இந்தியப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதிமூலம் இவை டாக்டர் மில்லருக்கு அனுப்பப்படும்.

1,211 இந்தியர்கட்கு 'சீட்டு'!

வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் நடவடிக்கையாம்

கொழும்பு, அக். 17—

தற்காலிக வாச அனுமதிச் சீட்டுடன் (விசா) இலங்கையில் வசித்துவரும் 1,121 பேருக்கு இறுதி விசாக்கள் அளிக்கப்பட்டுள்ளன; அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் ஆவர்.

இந்த இறுதி 'விசா'க் கால முடிவில் அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறிவிட வேண்டும். 'விசா'க் காலம் அதிகபட்சம் ஓராண்டுதான்,

கடந்த ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து இந்த ஆண்டு ஜுன் 30-ம் நாள்வரை இந்த 'விசா'க்கள் அளிக்கப்பட்டன. ஜுன் 30-க்குப் பிறகு எவ்வளவு பேருக்கு இறுதி 'விசா'க்கள் அளிக்கப்பட்டன என்பது தெரியவில்லை.

இவர்கள் பெரும்பாலும் வர்த்தகர்கள் -- வர்த்தக நிறுவன ஊழியர்கள் -- வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் கொள்கையின்படி இவர்களுக்கு இறுதி 'விசா'க்கள் அளிக்க அரசு முடிவு செய்ததாக அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறின.

கடந்த ஆண்டு செப்டம்பர் 30-ம் நாள், இலங்கையில் இந்திய 'விசா' உள்ளவர்கள் எண்ணிக்கை 10,324 என குடியேற்ற--வெளியேற்ற இலாகாவின் 1966—67-ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை கூறியது.

'மேல்நாட்டு முறையை அப்படியே பின்பற்றத் தேவையில்லை'

'ஏழை -- நடுத்தர மக்களுக்கு ஏற்ற வீடுகளைக் கட்டுக'

வீட்டு வசதி வாரியத்துக்கு பொதுப்பணி அமைச்சர் மு. கருணுநிதி யோசனை

சென்னை, அக். 17—

"தி. மு. கழக அரசு பதவியேற்றவுடன், 'இனி அரசு கட்டும் எந்தக் கட்டிடங்களானுலும், அழகுக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் பணம் செலவிடப்படக் கூடாது; கட்டப்படும் கட்டிடங்கள் எளிமையாக -- ஆனுல் வசதிகள் நிறைந்ததாக இருந்தால் போதும்' என்ற உத்தரவிட்டிருக்கிறது"

என்று பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள், நந்தனம் டர்ன்புல்ஸ் சாலையில், புதிய பல அடுக்குக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். அமைச்சர் மேலும் பேசியதாவது :—

"மாடிக் கட்டிடங்களின் மூலம்தான் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நிலை சென்னையில் இல்லை.

இங்கு காலி மனைகள் ஏராளமாக இருக்கின்றன; ஆனுல், பம்பாயில் மனைகள் கிடைப்பது அரிது; 1 சதுர அடி ரூ. 40-க்கு விற்கிறது; சென்னையில் 1 சதுர அடி ரூ. 4-க்கு விற்கிறது; ஆகவே, பம்பாயில் பல மாடிக் கட்டிடங்கள் கட்டுகிருர்கள்; சென்னைக்கு பல மாடிக் கட்டிடங்கள் அவசியம் இல்லை.

கட்டிடம் கட்டுவதில் சிக்கனத்தைக் கையாள வேண்டும்; வசதியாக இருந்தால் போதும் -- அலங்காரம் செய்து எழில் மிகுந்த கட்டிடமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நடுத்தர மக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் உதவி செய்யும் வகையில் சிறிய கட்டிடங்கள் கட்டத் திட்டமிட்டுள்ளோம்; மேல் நாடுகளைப் பார்த்து அப்படியே காப்பி அடிப்பதைவிட நம் வசதிக்கு ஏற்ப கட்டிடங்களைக் கட்டவேண்டும்.

சென்னையில் ஒவ்வொரு நாளும் புதிய குடிசைகள் உருவாகிக்கொண்டு இருக்கின்றன; இது ஏனென்ருல், 'கெட்டாலும் பட்டணம் போய்க் கெடுவோம்' என்ற எண்ணத்தில் கிராம மக்கள் சென்னையை நோக்கிப் படையெடுப்பதால்தான்! சென்னையின் படாடோபமும், ஆடம்பர வாழ்க்கையும் அவர்களைக் கவர்கின்றன; அப்படி வருபவர்கள் தங்க இடம் இல்லாமல், தலைவர்கள் பெயரால், பல 'நகர்'களை உருவாக்கிவிடுகிருர்கள்; இதைத் தீர்க்கக் கட்சிச் சார்பற்ற முறையில் பணியாற்றச் செய்யவேண்டும்."

'குறைந்த வாடகையில் நிறைந்த வசதியளிக்க வேண்டும்'

வீட்டு வசதி வாரியத்துக்கு அமைச்சர் செ. மாதவன் அறிவுறுத்தல்

சென்னை, அக். 17—

"வீடுகள் கட்டுகையில் எவ்வளவு அதிக அளவில் வசதிகள் செய்து தரமுடியுமோ அவ்வளவு வசதிகளைச் செய்து தரவேண்டும்; வாடகைத் தருபவர்களின் மனம் புண்படாத அளவுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும்.

"வீட்டு வசதி வாரியத்தினர் கட்டியுள்ள வீடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகையை இன்னும் குறைக்கமுடியுமா என்று மறுபரிசீலனை செய்யும்படி வீட்டு வசதி வாரியத்தினரைப் பலமுறை கேட்டுக்கொண்டிருக்கிறேன்"

என்று நந்தனம் டர்ன்புல்ஸ் சாலையில் வீட்டு வசதி வாரியத்திஞல் கட்டப்பட்டுள்ள பல மாடிக் கட்டிடத்தையும் -- வாரியத் தலைமை அலுவலகத்தின் இணைப்பு மாடிகளையும் திறக்கும் விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சட்ட அமைச்சரும் தமிழக வீட்டு வசதி அமைச்சருமான செ. மாதவன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"இலாப நோக்கத்துடன் இல்லாமல் பொதுமக்களுக்குக் குறைந்த வாடகையில், அதிக வசதிகள் கொண்ட வீடுகள் கட்டித் தரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

"கட்டிட வேலைகளில் எவ்வளவு தூரம் சிக்கனம் செய்ய முடியுமோ அவ்வளவுக்குச் சிக்கனம் செய்து மிகக் குறைந்த செலவில் கட்டிடங்களைக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"மக்களுக்கு வீட்டு வசதி செய்யப் பல வழிகளில் முயற்சி செய்யப்படுகிறது. புதிய வீடுகள் கட்ட வீட்டு வங்கியின்மூலம் கடன் கொடுக்கிருேம். கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக வீடு கட்டிக் கொடுக்க ரூ. 38-இலட்சம் செலவு செய்துள்ளோம். வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்ட ரூ. 35-இலட்சம் செலவு செய்துள்ளோம்."

'பிரிட்டானியா'---உணவு உலகில் ஓர் 'சாம்ராஜ்யம்'!

புரட்சிக்கனலுடன் ---புசிப்பதற்கு ரொட்டி கேட்டுச் சென்ற பிரெஞ்சு மக்களை, அரசி அண்டாய்னெட், 'ஏன்--கேக்குகளைச் சாப்பிடுவது தானே?' என்று கேட்டது, பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றில் ஏறிவிட்ட முக்கிய நிகழ்ச்சி!

சென்னையில் இன்று (வெள்ளிக் கிழமை) குடியரசின் துணைத் தலைவரால் முறையுடன் துவக்கி வைக்கப்படவிருக்கும் 'பிரிட்டானியா பிஸ்கட்' தொழிற்சாலையை, அதன் நிர்வாகிகள், இரு நாட்களுக்குமுன் அழைத்துச் சென்று காண்பித்தபோது, மேற்கண்ட சரித்திரச் சம்பவம்தான் நினைவுக்கு வந்தது!

'ரொட்டிக்கும் வழிவகையற்றவர்கள், கேக்குகளை எவ்வாறு வாங்கிச் சாப்பிட முடியும்' என்பதை, வறுமையை அறியாத அரசி அறியவில்லை! அதனுல் பிறந்த வரிகள்தான், 'ஏன்-- கேக்குகளைச் சாப்பிடுவது தானே' என்பது!

அப்படி ஒரு பதிலைச் சொல்ல வேண்டிய அவசியமோ நிலைமையோ இங்கு இல்லை—இருக்கவும் முடியாது!

'ஒருவகை மாற்று உணவு' என்ற முறையில் அறிமுகமாகும் கோதுமைப் பொருள்கள், அரிசியை அடிப்படையாகக் கொண்ட தென் மாநிலங்களில் குறிப்பிடத்தக்க வகையில் பரவி வருகிறது.

'அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டால் சமாளிக்கவேண்டுமே' என்பதற்காக அல்ல---'அதுவும் ஒரு உணவுப் பொருளே' என்ற வகையில் கோதுமையும், வரவேற்கத்தக்க மாற்று உணவுதான்!

ஊருக்குச் செல்பவர்கள் கையில் எடுத்துச் செல்வதற்கும்—அழுகின்ற குழந்தைகளுக்கு தரும் 'இலஞ்ச'மாகவும்—நோயற்றவர்களுக்குத் தரப்படும் பத்தியப் பொருளாகவும் மட்டுமே இருந்துவந்திருக்கும் கோதுமைப்பண்டங்களான 'பிஸ்கட்'டுகளையும், 'ரொட்டி'களையும் ஒரு உணவு வகையாகவும் மாற்றியமைத்திருக்கும் பங்கினில், பிரிட்டானியா நிறுவனமும் முக்கிய இடம் வகிக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்—சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டானிய சாம்ராஜ்யம் இந்தியாவையும் கட்டி அரசாண்டபோது—கல்கத்தா சகோதரர்கள் ஆங்கிலேய வியாபாரி ஒருவர் கூட்டுடன் துவக்கிய இந்தப் பிரிட்டானிய நிறுவனம் -- பிரிட்டானியப் பேரரசு இந்திய மண்ணிலிருந்து அகற்றப்பட்டு விட்டபோதும் -- பிஸ்கட் உற்பத்தியில் ஒரு தொழிற் பேரரசாக வளர்ந்து பெருகிவந்திருக்கிறது!

எட்டரை ஏக்கர் நிலப் பரப்பில்-- சுமார் ரூ 80 இலட்சம் மூலதனத்தில் -- சென்னையின் தொழிற்புறமாம் அம்பத்தூர் பகுதியில் நிறுவப்பட்டிருக்கும் இவர்களது தொழிற்சாலை, இப்போதைய அளவில் மாதமொன்றுக்கு 350 டன் உற்பத்தி என்ற இலக்கில் இயக்கத் துவங்கியிருக்கிறது.

தென் மாநிலங்களின் தேவையை நேரடியாகவும் உடனடியாகவும் நிறைவு செய்யத் தமிழகத்தின் தலைநகரில் துவங்கியிருக்கும் இத் தொழிற்சாலை, இந்த நிறுவனத்தின் நான்காவது யூனிட்டாக இருக்கிறது.

'கல்கத்தா—பம்பாய்—டெல்லி—என்று ஏற்கனவே இத்தொழிலில் இருப்பவர்களாயிற்றே' என்ற எண்ணத்தில்,

"நீங்கள் புதிதாகத் தொழில் துவங்க வந்துள்ள தமிழகத்தின் தொழில் நிறுவனம் எப்படி இருக்கிறது"

என்று, இந்நிறுவனத்தின் முக்கிய அதிகாரி ஒருவரை அணுகிக் கேட்டபோது, அவர் கூறிய பதில் இதுதான் :—

"இதுவரை உள்ள நான்கு இடங்களில்—இதுவே மிக திருப்தியான நிலையைக் கொண்டிருக்கிறது."

ரொட்டி உற்பத்தியில் மத்திய அரசினரே ஆரம்பித்திருக்கும் நிறுவனம் ஒன்றின் போட்டியைச் சமாளிக்க வேண்டிய நிலை இருப்பதனை எல்லா வகையிலும் உணர்ந்திருக்கும் இந்த நிறுவனத்தினர் குறைபட்டுக் கொண்ட ஒன்று—'தென்னக மக்களிடையே இன்னும் கோதுமைப் பழக்கம் சரிவர பரவவில்லை' என்பதுதான்.

அதற்கு உடனே செய்தியாளர் ஒருவர் சுடச்சுட சொல்லிய பதில்—'பிஸ்கட்டுகள் எல்லாத் தரப்பினரும் வாங்கும் நிலையில் இல்லையே' என்பதுதான்!

ஆனுல், பிரிட்டானியா நிறுவனத்தினரைப் பொறுத்தவரையில், வாங்கும் சக்திக்கேற்பப் பல வகைகளில் தங்கள் உற்பத்தியை அறிமுகப்படுத்தினர் என்பது தொழிற்சாலையைச் சுற்றிப்பார்த்த பின்னரே தெரிய வந்தது.

'தரம் -- சுத்தம் இரண்டும் கெடாமல்—எல்லா நிலையிலும் உள்ள மக்களும் வாங்கும் வகையில் உற்பத்தியில் நாட்டம் செலுத்திஞல், கோதுமை ஒரு மாற்று உணவாக மாறும்' என்ற நம்பிக்கையில் தீவிரமாக முயற்சி செய்கிருர்கள் இந்த நிறுவனத்தினர்!

"உற்பத்திக்குத் தேவைப்படும் மற்ற பொருள்களான மைதா, சர்க்கரை ஆகியவை, அவ்வப்போது தட்டுப்பாட்டுக்கும் விலையேற்றத்துக்கும் ஆளாகிவருவதுதான், 'விலையைக் குறைக்க வேண்டும்' என்ற எங்கள் ஆசைக்குக் குறுக்கே நிற்கிறது" என்ற அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே!

சுமார் அரை பர்லாங் தூரத்தில் இடைவெளி இல்லாமல் இருக்கும் பல்வேறு இயந்திரங்களின் வழியாக 'மாவு' உருவத்தில் நுழையும் கோதுமையும், துணைப் பொருள்களும், வெவ்வேறு அளவுகளில் 'பாக்கிங்' செய்யப்பட்ட பிஸ்கட்டுகளாக வெளிவரும் காட்சி, அதை விரும்பும் குழந்தைகளும் பார்த்து இரசிக்கக்கூடிய ஒன்ருகும்.

அழுகையாலுலும் சிரிப்பாலுலும், சிறுவர்களைத் திருப்திபடுத்தும் 'பிஸ்கட்டு'கள், இந்த இருவகை உணர்ச்சிகளையும் பிரதிபலிப்பதுபோல், உற்பத்தியாகும்போது 'குளிர்சாதனம்' மூலமும் சூடு தரும் இயந்திரங்கள் மூலமும் அடுத்தடுத்து பதப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது!

'நியூட்ரோ' என்றும், 'பிரிட்டா' என்றும், 'ஜீரா' என்றும், 'ஆனியன்' என்றும் பிஸ்கட் உலகத்தில் ஒரு 'சாம்ராஜ்யத்'தையே படைக்கிறது பிரிட்டானியா!

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் பிஸ்கட் வகைகளில், பிரிட்டானியாவின் பங்கு மூன்றில் இரண்டு பங்கு என்று தெரியும்போது,வியப்பு இன்னும் மேலிடுகிறது!

கசாப்புக் கடைக்காரன், 'சைவம்' பற்றிய பிரசாரம் செய்யமாட்டான்; ஆனுல் பிரிட்டானியா நிறுவனத்தினர், தங்கள் ஊழியர்களுக்காகக் குழந்தை கட்டுப்பாடு நிலையம் ஒன்றினையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

"குழந்தைகளோ, பிஸ்கட்டுகளை விரும்புகின்றன; ஆனுல் நீங்களோ, அவர்களைக் கட்டுப்படுத்த முயலுகிறீர்களே"

எனக் கேட்ட செய்தியாளர் ஒருவருடன் நிறுவனத்தினரும் சேர்ந்து சிரித்தனர்!

ஆனுல், கேள்வியை அந்த நிறுவனத்தினர் இப்படிச் சமாளித்திருக்கலாம்—

'பிஸ்கட்டுகளோ ரொட்டியோ உணவு மட்டுமல்ல--ஒரு மாற்று உணவுமாகும்; எங்கள் உற்பத்தி, குழந்தைகளுக்காக மட்டுமல்ல--எல்லா வயதினருக்காகவும்தான்; நாங்கள் தயாரிப்பது ஒருவகை உணவே என்பதனை நாங்களும் உணர்ந்திருக்கிருேம் என்பதனைக் காட்ட---அந்த வகையில் மக்கள் தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதனைக் காட்ட இந்தக் குடும்பக் கட்டுப்பாடு நிலையம்!"

'உணவுத் துறையில், உழவுத் தொழிலுடன் இயந்திரத் துறையும் சேர்ந்து தோள் கொடுக்கலாம்-' என்பதற்கு, தமிழகத்தின் தொழிற் சேர்க்கைகளில் ஒன்ருக நிறுவப்பட்டிருக்கும் பிரிட்டானியா ஒரு குறிப்பிடத்தக்க சான்று!

—எஸ். ஆர்.

டி. பிரகாசம் உருவச் சிலைத் திறப்பு விழா

காலஞ்சென்ற ஆந்திரகேசரி டி பிரகாசம் அவர்களின் உருவச் சிலையை, சென்னை அண்ணுமலை மன்றம் எதிரில், 19—10—68 காலை 7-30 மணிக்கு துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர் வி.வி. கிரி திறந்து வைப்பார்; இத்திறப்பு விழாவுக்குப் பொதுப் பணியமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள் தலைமை வகிப்பார்.

இந்தச் சிலையை, சென்னை மாநகராட்சி மன்றம் அமைக்கிறது.

இலங்கை அரசின் கெடுபிடி

தமிழ் ஊழியர்கட்கு நெருக்கடி

கொழும்பு, அக். 17—

இலங்கையின் ஆட்சி மொழியான சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை என்ற காரணத்தைக் காட்டி, 1,016 அரசு ஊழியர்களுக்கு நோட்டீசுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன: இவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.

ஆட்சி மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு இலங்கை அரசு, இவர்களுக்கு மூன்று ஆண்டு கெடு கொடுத்திருந்ததாம்; அந்தக் கெடு, ஜுன் திங்களுடன் முடிந்து விட்டதாம்.

இது சம்பந்தமாச அவர்கள் ஏன் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கான காரணம் காட்டுவதற்கு இரண்டு வார அவகாசம் தரப்பட்டிருக்கிறதாம்; ஒரு திங்களுக்குப் பிறகு, இவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

BB

டாக்டர் V. V. கிரி,

பாரத நாட்டு உபராஷ்டிரபதி

பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனியின்

புதிய கிளையை இன்று சென்னையில்

திறந்து வைக்கிருர்!

இன்றைய தினம் பிரிட்டானியாவின் வரலாற்றில் ஒரு திருநாள்—சென்னையில் பிரிட்டானியாவின் புதிய கிளையின் திறப்பு விழா கொண்டாடப்படும் நன்னுள்! இந்தத் தருணத்தில் கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தென்னகத்துடன் பிரிட்டானியா கொண்டாடி வந்துள்ள தொடர்பைப் பற்றி அது பெருமிதம் அடைகிறது.

தென்னிந்திய மக்களான உங்களிடமிருந்து இது காறும் கிடைத்து வந்த அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், உங்களுடைய ஆதரவு மேலும் தொடர்ந்து கிடைக்கும் என்று பிரிட்டானியா எதிர்பார்க்கிறது. இன்று சென்னையில் ஆரம்பமாகும் புது கிளையின் வாயிலாக உங்களைப் போன்ற வாடிக்கையாளர்களுக்கு அதிக துரிதமான, திறமான சேவை புரிவதுடன், சமூகநலத் திட்டங்கள் போன்ற பொதுநலப் பணிகளில் தன் பங்கை வகிக்கவும் தென்னிந்திய மக்களுக்கு மேலான போஷணை கிடைக்கச் செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தொண்டு செய்யவும் பிரிட்டானியா உறுதி பூண்டிருக்கிறது.

தி பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனி லிமிடெட்



BBC 7/37

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

19--10--68

சென்னை 14-வது வட்டம்

முஸ்லீம் லீக் வேட்பாளர் சிலார் மியானை ஆதரித்து இரவு 9-மணிக்கு நாராயண சராங் தோட்டத் தெருவில்; தலைவர்: சி. தர்மலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, எம். எம். பீர் முகம்மது எம்.எல்.ஏ., வீரஜின்னு, ஷெரீப் எம்.பி., சம்சுதீன், வி. முனுசாமி எம்.சி.

சென்னை 15-வது வட்டம்

கழக வேட்பாளர் கே. கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம்; மாலை 7-மணிக்கு ஜீல்ஸ் தெருவில் (பிராட்வே டாக்கீசுக்கு அருகில்); தலைவர்: வாசுதேவன்; பேசுவோர்: ம பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., பிரண்ட் இராமசாமி, ந. இராமதாசு, ஜீவா கலைமணி, இராமநாதன், இரகுமான்கான், அ. ஜின்னு.

சென்னை 17-வது வட்டம்

கழக வேட்பாளர் கோ. செங்குட்டுவனை ஆதரித்து மாலை 7-மணிக்கு குப்பு மேஸ்திரி தெருவில்; தலைவர்: அப்துல்பாரி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி., கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, என். சுந்தரம்.

சென்னை 33-வது வட்டம்

பகுத்தறிவு மன்றச் சார்பில் கழக வேட்பாளர் மு. கன்னியப்பனை ஆதரித்து இரவு 7 மணிக்கு சூளை அவதானம் பாப்பையர் தெருவில்; தலைவர்: நீலமணி; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கோமகன், மற்றும் பலர். (மாலை 6-30 மணிக்கு, மாநகராட்சி குளிர் நீர்ச் சாதனத்தை திரு. சி. பி. சிற்றரசு திறந்துவைப்பார்.)

சென்னை 49-வது வட்டம்

கழக வேட்பாளர் சு. பாலன் அவர்களை ஆதரித்து இரவு 8-மணிக்கு அப்பாசாமி பிள்ளை தெருவில் (வாடியா பூங்கா அருகில்); தலைவர்: எஸ். சுப்பிரமணி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சி. சிட்டிபாபு எம்.பி., ஆலடி அருணா எம்.எல்.ஏ., கு. ஆறுமுகம், எஸ். எம். சின்னசாமி, அ. சு. மணி, மற்றும் பலர்.

சென்னை 60-வது வட்டம்

தே. து. இராமானுசம் அவர்களை ஆதரித்து மாலை 6-மணிக்கு புரசை சுந்தரம் பிள்ளை தெருவில்; தலைவர், மு. க. ஆறுமுகம்; மேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., க. வேழவேந்தன், மற்றும் பலர்.

குழுக் கூட்டம்

சிவகாசி

"நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 20—10—68 காலை 10-மணிக்கு சாத்தூர் ரோடில் உள்ள ஒலிம்பிக் சினிமா தியேட்டரில் நடைபெறும்; வட்டச் செயலாளர் கோ. வரதராசனும் கலந்து கொள்வார்" என்று நகரச் செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் (24, ... தெரு, சென்னை-10) ...

தேர்தல் பிரசார ஊர்வலங்கள்

20--10--68

சென்னை 60-வது வட்டம்

கழக வேட்பாளர் தே. து இராமாநுசத்தை ஆதரித்து காலை 7-30 மணிக்கு எம். குப்புசாமி தலைமையில், தேர்தல் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்படும்.

சென்னை 48 வது வட்டம்

நன்னெறிக் கழகச் சார்பில், 46, 47, 48, 49, 50 ஆகிய வட்டங்களின் கழக வேட்பாளர்களை ஆதரித்து ஜி டில்லிராஜ் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, 5 வட்டங்களிலும் சுற்றிவரும்.

சென்னை 93-வது வட்டம்

கழக வேட்பாளர் கே கோவிந்தசாமியை ஆதரித்து பிற்பகல் 3 மணியளவில், நொச்சிக்குப்பம் வானொலி நிலையம் அருகிலிருந்து இராம. அரங்கண்ணல் எம் எல்.ஏ. தலைமையிலும்—முரசொலி மாறன் முன்னிலையிலும் ஊர்வலம் நடைபெறும்.

சென்னை 91-வது வட்டம்

கழக வேட்பாளர் எஸ். வி. வேலுவை ஆதரித்து காலை 9 மணியளவில் திருவள்ளுவர் சிலை அருகிலிருந்து ஊர்வலம் புறப்படும்; ஊர்வலத்தை, மயிலை மாறன் தலைமையில் இராம. அரங்கண்ணல் துவக்கி வைப்பார்.

சென்னை 97-வது வட்டம்

கழக வேட்பாளர் அ. செல்வராசனை ஆதரித்து காலை 9 மணிக்கு ஏ. பெருமாள் தலைமையிலும்—நடிகர் ஆனந்தன் முன்னிலையிலும் சைக்கிள் ஊர்வலம், கிளைக்கழகத்திலிருந்து புறப்படும்.

சென்னை 20-வது வட்டம்

முஸ்லீம் லீக் வேட்பாளர் எம். ஏ. லத்தீப் அவர்களை ஆதரித்து காலை 9 மணியளவில் அப்துல் வாகாப் தலைமையிலும்—மாரியப்பன் முன்னிலையிலும் ஊர்வலம் புறப்படும்; சம்பந்தன் துவக்கி வைப்பார்.

சென்னை 30-வது வட்டம்

சென்னை 28, 29, 30 ஆகிய வட்டங்களின் கழக வேட்பாளர்களை ஆதரித்து எம். ஆர். சந்திரன் தலைமையில், காலை 9 மணிக்கு அண்ணாபிள்ளைத்தெரு மாநகராட்சிப் பொதுத் தொழிற்சாலை முன்னிருந்து ஊர்வலம் புறப்படும்; திரு. எம். ஆர். கண்ணன் எம். எல்.ஏ., துவக்கி வைப்பார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மச்துக்காரர்களின் வாக்குகளைப் பெற முனைந்தார்கள் காங்கிரசுப் பிரச்சாரப் பீரங்கிகள்! இப்போதோ, பழிக்கப்பட்ட பட்டணத்துக்காரர்களின் தயவினை நாட வேண்டிய மாநகராட்சித் தேர்தல் வந்துவிட்டது! 'படி அரிசித் திட்டத்துக்காக இவர்களைப் பழித்துப் பேசிவிட்டோமே' என எண்ணி, 'கிராமத்துக்காரர்களை இப்போது ஏதாவது 'ஏசி' வைப்போமே' என அவர்கள் முடிவு செய்ய நினைத்தாலும், அடுத்து வரப்போவது, ஊராட்சி -- பேரூராட்சி -- சிறு நகரங்களின் தேர்தல்கள்தான்!"

"அதாவது, மன்னரும் இராணியும் சேர்ந்து வந்து சோதிடக்காரனைச் சோதித்ததுபோல், மக்கள் மொத்தமாகச் சேர்ந்து வந்து காங்கிரசுக்காரர்களைச் சோதிக்கப் போகிறார்கள்!"

—எஸ். ஆர்.

கழகக் கட்டுப்பாட்டை மீறி நடக்கும் தோழர்களைப் பற்றி!

சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளர்களை எதிர்த்துச் சுயேச்சையாகப் போட்டியிடும் தோழர்களுக்கு ஆதரவாகவும், கழக வேட்பாளர்களுக்கு எதிராகவும் செயல்களில் ஈடுபடும் கழக உறுப்பினர்களின் முழு விவரத்தை முறைப்படி தலைமைக் கழகத்திற்கு அறிவிக்குமாறு சென்னை மாவட்டச் செயலாளரைத் தலைமைக் கழகம் கேட்டிருக்கிறது.

சென்னை மாவட்டச் செயலாளரிடமிருந்து முழு விவரம் கிடைத்ததும் அதனை ஆராய்ந்து முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

—தலைமைக் கழகம் தி.மு.க.)

தலைமைக் கழக அறிக்கை எண்: 2/68

ஒழுங்கு நடவடிக்கை

கழகச் சட்ட திட்டங்களுக்கு முரணாகவும், கழகக் கட்டுப்பாட்டினைச் சீர்குலைக்கும் வகையிலும், தவற்றிலிருந்து திருத்திக் கொள்வதற்குத் தலைமைக் கழகம் கொடுத்த வாய்ப்புகளைப் புறக்கணித்தும், சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளர்களை எதிர்த்துச் சுயேச்சையாகப் போட்டியிடும் கீழ்க்காணும் கழக உறுப்பினர்கள் மீது கழகச் சட்ட திட்டம் — விதி 31 — பிரிவு 12-இன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

கீழ்க்காணும் தோழர்கள், கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்தும், மற்றும் கழக அமைப்புக்களில் அவரவர் வகிக்கும் நிர்வாகப் பொறுப்புக்களிலிருந்தும் இன்று முதல் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அறவே நீக்கப்படுகிறார்கள் என்பது, இதன்மூலம் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

வட்டம்	பெயர்
7	வி. ஆறுமுகம்
35	மா. கோ. பாபு
99	ஜி. முனுசாமி
105	எஸ். நாராயணன்
115	க. செல்வராசு
117	தேவராசன்
119	எம். எஸ். இராகவலு

'அறிவகம்', சென்னை-18
18—10—68

இரா. நெடுஞ்செழியன்
(பொதுச்செயலாளருக்காக)

தனித்து நிற்கவில்லை -- தனித்து விடப்பட்டது!

"தமிழ்நாட்டில் கூட்டணியானது வேறெங்கும் இல்லாத அளவுக்குச் செயல்படுகிறது! இந்த மாநிலத்தில் காங்கிரசு எதேச்சாதிகாரத்தை எதிர்த்து சனநாயகத்தைக் காக்கவே நாங்களெல்லாம் ஒன்றுபட்டிருக்கிறோம்! நான்கு நாட்களுக்குச் சேர்ந்து இருக்கமுடியாத நிலை இருக்கும் இந்நாளில், ஒன்றரை ஆண்டுகளாகியும் இங்கு கூட்டணியானது வலிவடைந்தும் விரிவடைந்தும் வருகிறது!

"இதற்குக் காரணம், அண்ணா அவர்களின் பெருந்தன்மையும், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அவரது மனோபாவமும் ஆகும்! இதற்கு மாறாக அந்த முகாமில், 'வந்தால் வா -- போனால் போ' என்ற அலட்சியப் போக்கு நிலவுவதைக் காண்கிறோம்!

"தங்களது வீழ்ச்சிக்குக் காரணம், தாங்கள் செய்த தவறுகளே என்ற எண்ணம் இன்னும் காங்கிரசாருக்கு வரவில்லை! இந்த முறையும் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்தாலாவது, 'உணருகிறார்களா' என்று பார்ப்போம்!

"இப்போது இரண்டு கூட்டணிகள் மக்களிடம் வந்துள்ளன; ஒன்று -- தி. மு. கழகத்தையும் அதன் தோழமைக் கட்சிகளையும் கொண்டது; மற்றொன்று -- ஓட்டுப் பெட்டியை நெருங்குகிற நேரம் என்பதால் -- காங்கிரசில் பிளவுபட்டுள்ள சக்திகள்! தங்களுக்குள்ளே வகுத்துக்கொண்டுள்ள காங்கிரசுக் கூட்டணி!

"எல்லாக் கட்சிகளும் ஓர் அணியிலும், காங்கிரசு தனித்தும் நிற்பதாக சி. சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்; அது தனித்து நிற்கவில்லை -- தனித்து விடப்பட்டிருக்கிறது!"

-- ம. பொ. சிவஞானம்

(64-வது வட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

ஊழியர் கூட்டங்கள்

சென்னை 9-வது வட்டம்

தி. மு. க. ஊழியர் கூட்டம், 19—10—68 பிற்பகல் 2-30 மணிக்கு தொப்பமுதலித்தெரு, 17 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து அவர்களும் கலந்துகொள்வார்கள்; கழகத் தோழர்களும், தோழமைக் கட்சித் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை 69-வது வட்டம்

"தி. மு. க. ஊழியர் கூட்டம், 19—10—68 இரவு 10 மணிக்கு தேனாம்பேட்டை 'அன்பகத்'தில் நடைபெறும்; 69-வது வட்ட கழக ஊழியர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகிறேன்"

என, எழும்பூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

மாநகராட்சியில் தி.மு.க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது ரூ. 35 ஆயிரம் செலவாகும்!

ஆகவே, 'வருமானம் பெருகினாலும், கூடவே செலவுகளும் பெருகியிருக்கிறது' எனும் உண்மை தமிழ்நாட்டில் நிதி அமைச்சராக இருந்த சுப்பிரமணியத்திற்குத் தெரியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது!

அவருக்கு இது தெரியும்; தெரிந்தாலும், மக்களைக் குழப்புவதற்காக அப்படியெல்லாம் பேசுகிறார்!

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க.

குழுக் கூட்ட அறிவிப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், 20-10-68 காலை 10 மணிக்கு மேற்குத் தாம்பரம் பேபி உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் நடைபெறும்; அதுபோது மாவட்டக் கழக வளர்ச்சி குறித்தும், வருகிற நகராட்சித் தேர்தல் குறித்தும் ஆராயப்படும்; சிறப்பு அழைப்பாளர்களாக, மாவட்டத்தில் உள்ள பொதுக் குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற -- சட்டமன்ற -- மேலவை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

கழகத் தோழர்கட்கு கி. மனோகரன் அறிவிப்பு

சென்னை, அக். 18—

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் அறிவிப்பதாவது:—

"கடந்த ஒன்றரை மாத காலமாக உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்றுவந்த நான், போதுமான ஓய்வும், முறையான பேணுதலும் இல்லாத காரணத்தால் மஞ்சட் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு, டாக்டர் கே. வி. திருவேங்கடம் அவர்களின் ஆலோசனையின்பேரில் ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டு வார காலமாவது சிகிச்சை பெறவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

"மாநகராட்சிமன்றத் தேர்தல் நடைபெறும் இவ்வேளையில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிட்டமைக்காக வருந்துகிறேன்.

"மாநகராட்சித் தேர்தலில் கழகமும் -- தோழமைக் கட்சிகளும் நூற்றுக்கு நூறும் வாகை சூடும் என்ற நம்பிக்கையில் அனைவரும் பணிபுரிய வேண்டுகிறேன்."

மத்திய அரசு ஊழியர்கட்கு அகவிலைப் படி உயரும்

வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையில் நடவடிக்கை

புதுடில்லி, அக். 17—

வாழ்க்கைச் செலவுப் புள்ளி மேலும் உயர்ந்துள்ளதை யொட்டி, மத்திய அரசு ஊழியர்களின் பஞ்சப் படியை உயர்த்துவது குறித்து விரைவில் மத்திய அமைச்சரவை ஆலோசிக்கும் என்று தெரிகிறது.

செப்டம்பர் முதல் நாளிலிருந்து, வாழ்க்கைச் செலவுப் புள்ளி 10 உயர்ந்துள்ளதை நிதியமைச்சுத் துறை, தொழிலமைச்சுத் துறையுடன் கலந்து ஏற்றுக்கொண்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி 215 என்ற அடிப்படையில், பஞ்சப் படியில் கூடுதல் செய்வது பற்றிய நிதி நிலையை நிதியமைச்சுத்துறை ஆராய்ந்து வருகிறது.

இப்படிக் கூடுதல் செய்வதன் மூலம் ரூ. 30 கோடி அரசுக்கு அதிகச் செலவு ஏற்படும்.

கலை நிகழ்ச்சி

சென்னை 39, 40-வது வட்ட தி. மு. க. வேட்பாளர்களான டபிள்யூ பி. பி. சுந்தரம், பொ. கு. இராமதாஸ் ஆகியோரை ஆதரித்து 20--10--68 இரவு 8-மணிக்கு இராசப்ப செட்டித் தெருவில், செல்வநாத செட்டியார் தலைமையிலும்—நீலநாராயணன் முன்னிலையிலும், புதுக்கோட்டை இளங்கோவன்—பூங்கோதை குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.